OS .No. 99/2019 நாள் : 20.02..2024

## DW1 குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்)

நான் இந்த வழக்கில் 3 ம் பிரதிவாதி என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தின் சர்வே எண். 76/9 ஆகும். வழக்கு சொத்து விவரத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்தினை 4 அயிட்ட சொத்துக்களாக பிரித்து காட்டப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். 1 ம் அயிட்ட சொத்தின் மொத்த விஸ்தீரணம் 10. 3/4 சென்டாகும். 2 ம் அயிட்ட சொத்து 1872 சதுடி ஆகும், செண்ட் கணக்கில் 4 சென்டாகும். 3 ம் அயிட்ட சொத்தின் விஸ்தீரணம் 4.1/4 செண்ட் ஆகும், மேற்படி வழக்கை வாதி எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும், வாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது அப்பாவுடன் உடன்பிறந்த அத்தை முறையாவார். மொத்த சொத்தை பொறுத்து வாதி என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால் மொத்த சொத்தில் பாதி பாகம் வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்தை வாங்கியது எனது தகப்பனாரின் பாட்டனார் 1937 ல் வாங்கினார். அப்போது அந்த சொத்தின் மொத்த விஸ்தீரணம் 21 சென்டாகும். அதில் எனது பாட்டனாருக்கு 10 3/4 செண்டும், சிறிய பாட்டனாருக்கு 10 1/4 செண்டும் பாகமாக பிரித்துக்கொண்டார்கள். அந்த பாகப்பரிவினையை அவர்கள் எவ்வாறு பிரித்துக்கொண்டார்கள் என்றால் நோட்டரி முன்பாக கரவோலையாக எழுதிக்கொண்டார்கள். அதில் மேற்கு பக்கம் எனது பாட்டனாருக்கு , இடது பக்கம் எனது சிறிய பாட்டனாருக்கும் பிரிக்கப்பட்டது. தாவா சொத்தில் வீடு உள்ளது. அந்த வீட்டில் மேற்கு பக்கம் எனது பாட்டனாரும், கிழக்கு பக்கம் எனது சிறிய பாட்டனாரும் பிரித்துக்கொண்டார்கள். எனது அத்தைக்கு திருமணம் செய்யும்போது எனது தந்தை சீர்வரிசை செய்து திருமணம் செய்து வைத்தாரா என்றால் திருமணம் செய்து வைத்தார், சீர்வரிசை செய்தாரா என்று எனக்கு தெரியாது,. அப்போது எனது தாத்தா வெளிநாட்டில் இருந்தார். 2 ம் அயிட்ட சொத்தை எனது தகப்பனார் எப்போது விற்றார் என்று எனக்கு தெரியாது. அவ்வாறு விற்பனை செய்த விவரம் 2019 ல்தான் எனக்கு தெரியும், 3 ம் அயிட்ட சொத்தை நானும், எனது தாயார் மற்றும் சகோதரர்கள் சேர்ந்து தான் 2006 ல் கிரையம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். 2006 ல் கிரையம் செய்து கொடுத்த சொத்தை 2011 ல் நான் திரும்ப வாங்கிக்கொண்டேன். அந்த சொத்தை நான் திரும்ப வாங்கிக் கொண்டதற்கான பதிவு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் உடன்படிக்கை மட்டும் போட்டுள்ளேன்.

2ம் அயிட்ட சொத்தையும், 3ம் அயிட்ட சொத்தையும் பாபு என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். 2,3, அயிட்ட சொத்துக்களுக்கு பட்டா தற்போது வரை எனது தகப்பனார் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான். விற்பனை செய்த 2ம் அயிட்ட சொத்தின் நீளம், அகலம் தெரியுமா என்றால் தெரியும் கிழக்கு, மேற்கில் 22 1/2 அடி, தெற்கு வடக்கில் 78 3/4 அடியாகும், 2019 ல் மேற்படி 2 வது சொத்தை அளந்து பார்த்தபோது போது கிழக்கு மேற்கில் 18 அடிதான் இருந்தது. பாக்கி 4 1/2 சொத்து வீட்டின் தாய் சுவற்றையும் சேர்த்து கிரையம் வாங்கியுள்ளார்கள். 2006 ல் எனது தகப்பனார் கிரையம் செய்து கொடுக்கப்பட்ட கிரையத்தில் வீட்டின் தாய் சுவர் உட்பட என்று குறிப்பிட்டு கிரையம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 2019 ல் 5ம் பிரதிவாதியின் கணவரால் வாங்கப்பட்ட சொத்தில் முள்வேலி வைப்பதற்காக வந்தபோது எனக்கும், அவர்களுக்கும் பிரச்னை ஏற்பட்டது. அப்போதுதான் எனக்கு கிரையம் செய்து கொடுக்கப்பட்ட விவரம் தெரியும். அதனால் 1ம் அயிட்ட சொத்தில் எனது அத்தைக்கு பாகம் உள்ளதா இல்லையா என்றால் உள்ளது. ஏற்கனவே தாவா சொத்துக்களில் 2,3, அயிட்ட சொத்துக்களை விற்பனை செய்து விட்டு தற்போது வாங்கி விட்டதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதி பாகம் கேட்பார் என்ற நோக்கத்தினாலேயே நான் ஏற்கனவே தாவா சொத்துக்களை விற்பனை செய்து பணமாக்கிக்கொண்டு , 5ம் பிரதிவாதியின் கணவரும், 6 முதல் 8 பிரதிவாதிகளின் தகப்பனாருமான பாபு அவர்களிடம் விற்பனை செய்து விட்டு வாதிக்கு பாகம் கொடுக்கக்கூடாது என்ற நோக்கத்தில் செயல்பட்டு வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த தாவா சொத்துக்களை தவிர இதர சொத்துக்கள் எங்கள் குடும்பத்தில் இருந்ததா என்றால் அவைகள் எனது பாட்டனார் காலத்திலேயே விற்பனை செய்யப்பட்டு விட்டன. தற்போது இருப்பது 1ம் அயிட்ட சொத்துதான் என்றால் சரிதான். தற்போது 4ம் அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ள வீட்டின் தாய் சுவற்றை இடித்து விட்டால் அந்த வீட்டில் குடியிருக்க முடியாது என்றால் சரிதான், வழக்குரையில் சேர்க்கப்பட்டுள்ள எனது தந்தையின் வாரிசுதாரர்கள் சரியாக உள்ளது என்றால் இல்லை எனது தம்பி ராமன் சேர்க்கப்படவில்லை. 2006ம் வருடம் பாபு என்பவருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட ஆவணம் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நான் , எனது தாயார், எனது சகோதரர்கள் லெட்சுமணன்,கார்மேகம் ஆகியோர் சேர்ந்து எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரிதான்.

அந்த கிரைய ஆவணத்தில் ராமன் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் ராமன் வெளிநாட்டில் உள்ளதாவும், அதனால் அவரிடம் சம்மத பத்திரம் எழுதி வாங்கியுள்ளதாகவும் கிரைய ஆவணத்தில் கூறியுள்ள நிலையில் அந்த சம்மத பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி கிரைய ஆவணம் பதிவு செய்யும்போது ராமன் கொடுத்த சம்மத கடித்தத்தை இணைத்துக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ராமன் தற்போது ஊரில் உள்ளார், அவர் ஊருக்கு வந்து மூன்று மாதம் ஆகிறது. வாதியானவர் முறையாகத்தான் வாரிசுகளை வழக்கில் சேர்த்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்கண்ட விவரங்களை நான் எதிர்வழக்குரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கிரைய உடன்படிக்கையில் நான் மட்டும் 3ம் அயிட்ட சொத்திற்கு அட்வான்ஸ் கொடுத்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3ம் அயிட்ட சொத்திற்கு எவ்வளவு கிரையம் பேசப்பட்டது என்றால் ரூ.3,50,000/-ம் ஆகும், மேற்படி கிரைய உடன்படிக்கை பதிவு செய்யப்படாததால் அது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிக்கு பாதி பாகம் கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது 5 முதல் 8 பிரதிவாதிகளுடன் சேர்ந்து கொண்டு அவர்களுக்கு ஆதரவாக வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**